1983 மார்ச் 1

விவசாயம் செய்ய முடியாமல் கஷ்டப்படுகிறார்கள். இப்போது அந்த ஆலைக்கு நிலம் கொடுத்தவர்கள் குடும்பத்தைச் சேர்ந்த 80 பேர்களுக்குத்தான் வேலை கொடுக்கப்பட்டிருப்பதாகச் சொன்னார்கள். நிலம் கொடுத்த பலர் மனு செய்திருக்கிறார்கள். ஆகவே, அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, அந்த ஆலையில் வேலை கொடுக்க ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : தலைவரவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதைப்போல, மனு செய்த எல்லோருக்கும் வேலை கொடுக்க முடியாது. ஆனால் அத்தனை பேர்களுக்கும் நிலத்திற்கான 'காம்பென்சேஷன்' கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும் நிலம் கொடுத்தவர்களுக்கு வேலையில் முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் 80 பேர்களுக்கு வேலை கொடுக்கப்பட்டிருக்கிறது. வேலைக்கு ஆள் எடுக்கும்போது அவர்களுடைய கல்வித் தகுதி, தொழில் துறையில் அவர்கள் பெற்றிருக்கிற படிப்பு, பயிற்சி இப்படிப்பட்ட பல தகுதிகள் அடிப்படையில்தான் ஆள் எடுக்க வேண்டியிருக்கிறது. அந்த அடிப்படையில் நிலம் கொடுத்தவர்களுக்கு வேலையில் முன்னுரிமை கொடுக்கப்பட்டு, வேலைக்கு எடுக்கப்பட்டிருக்கிறார்கள். இனிமேல் ஆள் எடுக்கும்போதும் அந்த அடிப்படையில் முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மாணவர்களுக்கான அதிக உதவி வழங்கும் திட்டம்.

***வினா எண் 299—திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாழ்த்தப்பட்ட வகுப்பு மாணவர்கள் 10 ஆம் வகுப்பில் 60 சதத்திற்கு மேல் மார்க் வாங்கினால் ரூபாய் 300 அதிக உதவி வழங்கும் திட்டம் 1980–81 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : ஆம். இத் திட்டம் 1980–81 ஆம் ஆண்டு செயல்படுத்தப்பட்டது.

திரு. என். பழனிவேல் : தலைவரவர்களே, 10 வது வகுப்பு படிக்கும் மாணவர்களுக்கு தற்போது அரசு 'ஸ்காலர்ஷிப்' பணமாகக் கொடுப்பதில்லை. அதை புத்தகமாகக் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது. அந்த புத்தகம் கூட பல இடங்களில் கிடைப்பதில்லை. இந்த நிலையில் 60 சதவீதத்திற்கு மேல் மார்க்

1982 மார்ச் 1

வாங்கிய தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கு 300 ரூபாய் தனி உதவித் தொகை வழங்கப்படுவதாகச் சொல்கிறார்கள். டியூஷன் வைத்து தனி பயிற்சி அளிக்கக்கூடிய வசதி படைத்தவர்கள் தான். இந்த உதவித் தொகையைப் பெற முடியும். ஆகவே, ஏழை மாணவர்களுக்கும் இந்த உதவித் தொகை கிடைக்கின்ற வகையில், எல்லா மாணவர்களுக்கும் கிடைக்கின்ற வகையில் இதை மாற்றியமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா -

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, தற்போது அரசு வழங்கி வருகின்ற புத்தகங்களைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சென்ற ஆண்டு இதைப் போன்ற ஒரு நிலைமை இருந்ததை மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும் சுட்டிக்காட்டிய அடிப்படையில் இந்த ஆண்டு அத்தகைய குறைகள் இல்லாமல் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறது. ஆனால் இந்த 300 ரூபாய் உதவித் தொகை வழங்கும் திட்டத்தைப் பொறுத்தவரையில அதிக அளவில் மதிப்பு எண்கள் பெறுகின்ற மாணவர்களை ஊக்கப்படுத்த வேண்டுமென்ற அடிப்படையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இது மட்டுமன்றி, இந்த மாணவர்கள் தங்களுடைய மேல் படிப்புக்காகவும் இதே உதவித் தொகையைப் பெறுகின்ற வசதியை அரசு செய்து தந்திருக்கிறது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போல அனைத்து மாணவர்களுக்கும் இந்த உதவித் தொகையை வழங்கும் உத்தேசம் அரசுக்கு இல்லை.

திரு. என். பழனிவேல் : தலைரவர்களே, அனைத்து மாணவர்களுக்கும் இந்த உதவித் தொகை வழங்கும் உத்தேசம் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அப்படியானால் இப்போது இந்தத் திட்டம் எந்த நோக்கத்திற்காக அமுல் செய்யப்படுகிறது? நான் ஏற்கெனவே சொன்னமாதிரி ஒருசில வசதி படைத்தவர்கள்தான் இதன் பலனை அனுபவிக்க முடியும். தாழ்த்தப்பட்ட மாணவர்கள் அனைவரும், குறைந்த மார்க் வாங்கி தேர்ச்சி பெறுகின்றவர்களாக இருந்தாலும், இந்தத் திட்டத்தின் பலனை அனுபவிக்கின்ற முறையில், இனியாவது அரசு மறுபரிசீலனை செய்து, தகுந்த நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்கள் நல்லமுறையில் பயில வேண்டுமென்ற உணர்வோடு அவர்கள் தனியாகப் பயிற்சி பெற, தனியாக ஆசிரியர்களை வைத்து அந்தந்தப் பள்ளிகளிலேயே பயிற்சி அளிக்க இந்த அரசு ஏற்பாடு செய்திருக்கிறது. அதை எல்லா மாணவர்களும் பயன்படுத்தி, தங்களுடைய கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது. அத்தகைய

மாணவர்கள் மேலும் சிறந்த மாணவர்களாக வரவேண்டும்; சிறந்த முறையில் அவர்கள் பயிற்சி பெற வேண்டுமென்பதற் காக இந்தத் தனி உதவித் திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தை எல்லா மாணவர்களுக்கும் விஸ்தரிக்கும் எண்ணம் அரசுக்கு இல்லை.

திரு. சு. பாலன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 10-வது வகுப்பிலே 60 சதவிதம் மார்க்கு வாங்கிய மாணவர்களுக்கு சிறப்புத் தொகையாக 300 ரூபாய் வழங்கப் படுகின்றது என்று சொன்னார்கள். 1980—81 ஆம் ஆண்டு எத்தனை மாணவர்கள் இப்படிப்பட்ட சிறப்புத்தொகையைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களில் ஆண்கள் எத்தனை, பெண் கள் எத்தனை?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, 1980—81 ஆம் ஆண்டு மட்டும் ஏறத்தாழ 4.91 இலட்சம் ரூபாய் இந்தத் திட்டத்திற்காகச் செலவிடப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் 1,638 மாணவர்கள் பயன் அடைந்து இருக்கிறார் கள். ஆண்கள் எத்தனை பேர், பெண்கள் எத்தனை பேர் என்ற விவரம் இல்லை.

திரு. எல். இளையபெருமாள் : தலைவரவர்களே, அமைச் சரவர்கள் பதில் சொல்கின்றபோது இந்த ஆண்டு எல்லா மாணவர்களுக்கும் புத்தகம் கொடுக்கப்பட்டதாகச் சொன் னார்கள். அது தவறான ஒரு தகவல். சென்ற மாதத்திலே அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதி இருக்கிறேன். தென் னாற்காடு மாவட்டத்திலே காட்டுமன்னார் தாலுக்காவிலே முஸ்லீம் சமுதாய மக்கள் வாழ்கின்ற லால்பேட்டை பகுதியிலே இன்று வரை இங்கிலீஷ் புத்தகத்தைத் தவிர வேறு எந்தப் புத்தகமும் கொடுக்கப்படவில்லை என்பது அமைச்சர் அவர்களுக்கு தெரியுமா? இப்படிக் கொடுக்கப்படாமல் இருப் பதற்குக் காரணம் என்ன? ஆதி திராவிடர் நல அதிகாரிகளின் தவறா? அல்லது அவர்கள் சரியான தகவலை அரசாங்கத் திற்குக் கொடுக்காதது காரணமா? இப்படிப்பட்ட சூழ்நிலை யில் புத்தகத்தைச் சரியாகக் கொடுக்காதவர்கள் மீது நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர் களும் இதுபற்றி தெரிவித்ததின் அடிப்படையில் 30—3—1981க் குள் தமிழகத்திலுள்ள அனைத்துப் பள்ளி மாணவர்களுக்கும் புத்தகம் சென்று சேரவேண்டும் என்று இந்த அரசு பிரத்தி யேகமாக ஆணை பிறப்பித்திருந்தது. ஆனால் ஒருசில இடங்களில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்து இருப்

1982 மார்ச் 1]

பதைப் போலப் புத்தகங்கள் சென்று சேராமல் இருக்கும் என்றால் அதற்கு யார் காரணம் என்பதை ஆராய்ந்து தகுந்த நடவடிக்கையினை அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. மூர்த்தி : தலைவரவர்களே, இந்த மார்க் விகிதத்தின்படி மாணவர்களைத் தேர்ந்தெடுக்கின்றபோது ஒவ்வொரு பள்ளி வாரியாக மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்களா அல்லது மாவட்ட வாரியாக தேர்ந்தெடுக்கப் படுகிறார்களா? மேலும் இப்படிச் சிறப்புதவி பெறுகின்ற மாணவர்கள் மேல் படிப்புக்குச் செல்வதற்காக சிறப்புத் திட்டத்திலே அவர்களுக்குப் பண வசதிசெய்து கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே மாவட்ட ரீதியாக இரண்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். அவர்கள் அந்தந்தப் பள்ளிகளிலே 60 சத வீதத்திற்கு மேலாக மதிப்பெண்கள் பெறுகின்றபோது அந்த மாணவர்களைத் தேர்வு செய்து அவர்களுக்கு வருடத்திற்கு ரூபாய் 300 அரசு தருகின்றது. அவர்கள் எந்த மேல் படிப்புக்குச் செல்வதாக இருந்தாலும் தொடர்ந்து இந்த உதவித்தொகை அளிக்கப்படுகின்றது.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் பதில் சொல்கின்றபோது 30—3—1982-க்குள் புத்தகங்கள் பூராவும் கொடுக்கப்படுவதற்கு உத்தரவிடப்பட்டிருக்கின்றது என்று சொன்னார்கள். மார்ச் மாதம் 30 ஆம் தேதி என்றால் மார்ச் மாதம் முடிந்துவிடுகின்றது என்றுதான் அர்த்தம். அப்படியானால் மார்ச் மாதம் முடிந்ததற்குப் பிறகு எப்படி மாணவர்கள் படிப்பார்கள்? அவர்களுடைய தரம் எப்படி இருக்கும்? ஆகவே இப்படித்தான் இந்தப் புத்தகம் வழங்குகின்ற நிலைமை இருக்கவேண்டுமா என்பது பற்றி மாண்புமிகு அமைச்சரவர்கள் என்ன பதில் சொல்கிறார் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, 30—6—1981-க்குள் தரவேண்டும் என்றுதான் நான் குறிப்பிட்டிருதேன். இந்த ஆண்டும் அதே முறையைப் பின்பற்றும் இந்த அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ் : மாண்புமிகு தலைவரவர்களே, சில தாழ்த்தப்பட்ட மாணவர்கள் டேலண்ட் டெஸ்டிலே போதிய மார்க்குகளை வாங்கி மெரிட் ஸ்காலர்ஷிப்பும் வாங்குவார்கள். ஆகவே அந்த மாணவர்களுக்கு அவர்கள் ஏற்கெனவே வாங்குகின்ற உதவித்தொகையோடு இந்த ஸ்காலர்ஷிப்பும் சேர்த்துக் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவரவர்களே, அதோடு சேர்த்து இந்த உதவித் தொகையும் அளிக்கப்படும்.